DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.103/12

Deposition of Witness: PW 8

| | |
|---|---|
| Name குழந்தைவேலு | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். நான் துணை ஆட்சியராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கு.எண்.58/10 வழக்கில் தொந்தி மகன் சுப்பையன் என்பவருக்கு 2 வாரிசு சான்றிதழ் வழங்கியது சம்மந்தமாக மெய்தன்மை குறித்து பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் 20.9.10 ல் அறிக்கை கேட்டிருந்தேன். இறுதியாக 22.10.10 ல் 2 வாரிசுசான்றிதழ்களும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அலுவலக உதவியாளரை விசாரணை செய்து உண்மை தன்மை குறித்து அறிக்கை சமர்பிக்கப்பட்டது. 29.12.10 ல் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். 2 வாரிசுசான்றிதழ் வழங்கியது சரியானது என்றும், தொந்திபாலன் மற்றும் சுப்பையன் என்பவர்கள் இருவேறு நபர்கள் என்று கூறிப்பிட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சான்று நான் கொடுத்தது தான். மேற்படி சான்றில் எனக்காக துணை வட்டாட்சியர் கையெப்பமிட்டுள்ளார். அது அசாஆ.4. 6.7.10 ம் தேதியிட்ட தொந்தி மகன் சுப்பையன் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்று அசாஆ.5.

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

6 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.